கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**PW 1– OS. No. 570/2022**

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்பு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கதிர்வேல் | தொழில் : |
| த/பெ. : திரு, நாச்சிமுத்து | வயது : 56 |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். 10.12.1999 தேதியிட்ட பெரியசாமி பெயரிலான கிரய பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.3.2023 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அறிவிப்பை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அறிவிப்பை 1–2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை எண்ணிக்கை 2 தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 7.11.2022 தேதிய தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் கணினி நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய இருப்பிட முகவரியை காட்டுவதற்காக ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். (அசல் சரிப்பார்க்கப்பட்டது) அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2024.03.25 18:43:19 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.